THIRU V. K. RAMASWAMY MUDALIAR : May I know whether we are likely to get any compensation for the loss incurred by the Tamilians?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: பொதுவாக நடந்த அந்த அமளியில் ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் அங்கு சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அதில் தமிழர்கள் வசிக்கும் பகுதியில் எவ்வளவு சேதம் என்று தெரியவில்லை. நஷ்ட ஈடு கொடுப்பது சம்பந்தமாக அவர்கள் எந்த வித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, இந்த சிவசேனையை அடக்குவதற்கு சென்ட்ரல் கவர்ன்மெண்டில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? எடுக்க விரும்புகிறார்களா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி. சிவசேனையினுடைய அட்டூழியங்கள் பரவாமல் தடுப்பதற்கு மத்திய அரசு மகாராஷ்டிர மாநில அரசுக்கு தாக்கீது அனுப்பியிருக்கிறது.

Medical College for Tiruchi

* 308 Q.—THIRU N. R THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Seshachalam Chettiar Charities have come forward to donate Rs. 5 lakhs for the opening of a Medical College at Tiruchi ; and

(*b*) if so, whether a Medical College will be opened taking advantage of this offer ?

திருச்சிக்கு ஒரு வைத்தியக் கல்லூரி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சியில் வைத்தியக் கல்லூரி நிறுவ சேஷாசலம் செட்டியார் தர்ம நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் கொடுப்பதாகக் கூறியுள்ளனரா ?

(இ) ஆமெனில், இதைப் பயன்படுத்தி வைத்தியக் கல்லூரி நிறுவப் படுமா ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அளிக்கப்பட்ட உதவித் தொகையானது போதுமானதாக இல்லாத படியால் திருச்சிராப்பள்ளியில் ஒரு மருத்துவக் கல்லூரி திறக்க இயலாது. திருச்சிராப்பள்ளியில் மருத்துவக் கல்லூரி திறக்கப்படுவதற்கான செயற் குறிப்பு நிறைவுறும் காலத்தில் அவ்வுதவித் தொகையானது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, திருச்சியில் மருத்துவக் கல்லூரியைத் திறப்பதற்குக் காரணம் பணம் இல்லாததா? அந்த இடத்தைப் பரிசீலனை செய்வதில் தயக்கமா ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து : பணம் இல்லை என்பதல்ல. மேலும் ஒரு கல்லூரி திறக்க முடியுமா என்ற பரிசீலனையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லை. திருச்சியில் இருக்கிற திரு. எம். எஸ். கிருஷ்ண மூர்த்திச் செட்டியார், சோணாசலம் செட்டியார் சேரிட்டியைச் சேர்ந்தவர்கள் ரூ. 5 லட்சமும், 40 ஏக்கர் நிலமும் இலவசமாகத் தந்து மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். பொது மக்கள் ரூ. 15 லட்சம் நன்கொடை வசூலித்துக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் ஒரு கல்லூரி தேவையா என்பதுதான் இப்போதைய கேள்வியாக இருக்

31st March 1969]

கிறது. தேவை என்ற நிலை வரும்போது இவைகளையெல்லாம் வைத்துக் கல்லூரி துவக்கப்படுமா என்று பரிசீலிக்கலாம். மூன்று கோடி ரூபாய் ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்குத் தேவையாக இருக்கிறது. எனவே தான் அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, கோயமுத்தூரிலே ஏற்கனவே இரண்டு அன்பர்கள் ரூ. 25 லட்சம் கொடுப்பதாக உறுதி சொல்லி கொஞ்சம் ரூபாய் கொடுத்து ஒரு கல்லூரி நடைபெற்று வருகிறது. அப்படி இருக்க நேற்று முன்தினம் மறுபடியும் ரூ. 25 லட்சம் யாராவது கொடுக்க முன்வந்தால் அங்கே ஒரு கல்லூரி அமைக்க யோசிக்கப்படும் என்று சொன்னதாக பத்திரிகையில் வந்திருக்கிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய அரசாங்கம் இதுபோன்ற பிராந்திய கல்லூரிகள் ஐந்து ஏற்படுத்தவேண்டுமென்று ஒரு செயற் குறிப்பு வைத்து அதைக் குறித்து மாநில அரசாங்கத்தைக் கேட்டிருந்தார்கள். மாநில அரசாங்கம் கோவையில் பல பேர் நன்கொடை தருவதற்குக் காத்திருக்கிற காரணத்தால் மத்திய அரசாங்கத்தின் துணையோடு கல்லூரி ஏற்படுத்தலாம் என்று ஆலோசனை கூறிற்று. அதைக் குறித்து மத்திய அரசாங்கம் எவ்விதத் தகவலும் தரவில்லை. சேலத்தில் கூட ஒரு கல்லூரி துவக்க இருப்பதாக ஒரு செய்தியைப் பத்திரிகையில் பார்த்தோம்.

திரு டி. கே. சுப்பையா : எங்கள் கணக்குப்படி திருச்சியில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டது ரூ. 24 லட்சம். அமைச்சர் சொல்கிற படி ரூ. 15 லட்சமாக இருந்தாலும் கூட தனியார் கொடுத்த ஐந்து லட்சமும், இந்த 15 லட்சமும் சேர்த்து மொத்தம் 20 லட்சம் ரூபாய் எந்த வித முடிவும் ஏற்படாமல் தேங்கிக் கிடப்பது நியாயமா ? அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இன்றைக்குள்ள சூழ்நிலையில் மேலும் ஒரு கல்லூரி அவசியமா என்று தான் அரசாங்கம் பரிசீலனை செய்கிறது. ஏற்கனவே அரசாங்கத்தின் சார்பில் எட்டுக் கல்லூரிகள் இருக்கின்றன. தனியார் நடத்தும் கல்லூரி ஒன்று வேலூரில் இருக்கிறது. இந்தக் கல்லூரிகளில் தேர்ச்சி பெற்று வரும் மருத்துவர்களுக்கு வேலை கொடுக்கிற அளவுக்கு இப்போது வசதிகள், வாய்ப்புகள் இல்லாமல், இருக்கின்றன. மேலும் ஒரு புதிய கல்லூரியைத் திறப்பதற்கு இன்னும் முடிவு எடுக்கவில்லை. கொடுத்திருக்கிற நன்கொடைகள் பொது மக்கள் சார்பில் ரூ. 15 லட்சம் என்றுதான் அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. மேலும் அங்கத்தினர் அதிகமான தொகை சொல்வதற்கான புள்ளிவிவரம் தந்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

Allotment of seats in Medical Colleges

* 309 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to allot seats to students in Medical Colleges, region-wise ;

(b) whether there is any opinion expressed in the Supreme Court judgement that it can be implemented ; and

(c) into how many regions it is proposed to divide Tamil Nadu?

—

வைத்தியக் கல்லூரிகளில் இடம் ஒதுக்கல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார- அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பிராந்திய வாரியாக வைத்தியக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடம் ஒதுக்கும் திட்டம் இருக்கிறதா ?